Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

**C.C. No: 44/2024**

DATE : 21.05.2026

Depositions of witness for Prosecution

PW: 7

| | | | |
|---|---|---|---|
| Name | மாரிச்சாமி | Caste | |
| Father Name | நாச்சிமுத்து | Calling | காவல் உதவி ஆணையர் |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21 th day of May 2026

1ம் எதிரி இறந்துவிட்டார். 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு.பாபுசாமி ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u> –

நான் தற்போது மதுரை மாநகரத்தில் சிறப்பு நுண்ணறிவு பிரிவில் காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 10.04.2018 அன்று வத்திராயிருப்பு காவல் நிலைய குற்ற எண் 20/2016, பிரிவுகள் 420, 109, 448, 294(b), 323 and 506(i) IPC என்ற வழக்கில் எனக்கு முன்பு பணிபுரிந்த காவல் ஆய்வாளர்கள் ராஜா மற்றும் நாகராஜன் ஆகியோர் இவ்வழக்கை புலன் விசாரணை செய்து வழக்கு நிலுவையில் இருந்தது. மேற்படி வழக்கினை 10.04.2018 அன்று நான் என்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். பின்பு 05.08.2018 அன்று சாட்சிகள் கிருஷ்ணசாமி மற்றும் லீலாவதி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 03.09.2018 அன்று சாட்சிகள் சுப்புராம் மற்றும் சுந்தர்ராஜன், கோபால்சாமி ஆகிய 3 நபர்களையும் விசாரணை செய்து சுப்புராம் என்பவரின் வாக்குமூலத்தையும் சுந்தர்ராஜன் மற்றும் கோபால்சாமி ஆகியோர்களின் மறுவாக்குமூலத்தினையும் பதிவு செய்தேன். பின்னர் 11.10.2018 அன்று சாட்சி மகாலட்சுமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்பு 28.01.2019 அன்று சாட்சி கௌரி என்பவரை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே வழக்கின் சட்ட பிரிவுகளை 420, 109, 448, 294(b), 323 and 506(i) IPC–லிருந்து 109, 448, 294(b), 323 and 506(i) IPC–ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்..

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை –**

1) என்னுடைய விசாரணையில் சாட்சி கௌரி என்பவரை விசாரணை செய்த பொழுது கிரையம் முடிப்பதற்காக ரூ.75,000/– என பேசி முடிவு செய்து முன் தொகையாக ரூ.66,000/– கொடுத்ததாக சொல்லியுள்ளாரா என்றால் வெவ்வேறு காலகட்டத்தில் ரூ.66,000/– கொடுத்ததாக சொல்லியுள்ளார். முத்திரைத்தாள் வாங்கி கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொண்டதாக என்னுடைய விசாரணையில் நான் எதுவும் தெரிந்து கொண்டேனா என்றால் சரிதான் ஆனால் அதற்கான ஆவணங்கள் எதையும் என்னுடைய விசாரணையில் சமர்ப்பிக்கவில்லை. இந்த வழக்கில் பரணி என்பவரை சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

2) இந்த வழக்கில் உள்ள எதிரிகள் புகாரதாரரை தாக்கி காயப்படுத்தியதாக சொல்லியுள்ள நிலையில் காயம்பட்ட நபர் மருத்துவமனைக்கு சென்றதாகவும் சிகிச்சை அளித்ததாகவும் காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரச்சனை உரிமையியல் சார்ந்திருப்பதால் தரப்பினர்களை நீதிமன்றத்தை நாடுமாறு நான் அறிவுரை வழங்கினேனா என்றால்

இல்லை. குற்றச் சம்பவம் நடைபெற்றதனால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகார்தாரர் கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் கிரையம் செய்ய கேட்டு எதிரிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்று அனுப்பினார் என்றும் புகார் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு எதிரிகள் பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றும் மேற்படி அறிவிப்பு மற்றும் பதில் அறிவிப்பு ஆவணங்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த ஆவணத்தை நான் ஆராய்ந்து பார்த்தேனா என்றால் என்னுடைய விசாரணையில் மேற்படி ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை.

3) மேற்படி புகார்தாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்னர் தான் எதிரில் மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் இருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தான் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் புகார்தாரர் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் இருந்து உத்தரவு பெறுவதற்கு முன்பே காவல் நிலையத்தில் ஒரு புகார் மனு கொடுத்தார் என்றும் மேற்படி புகார் மனுவானது உரிமையியல் பிரச்சனை சார்ந்து இருப்பதனால் காவல் நிலையத்தில் வாங்க மறுக்கப்பட்டது என்றும் அதன் பின்னர்தான் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் இருந்து மனுதாரர் உத்தரவை பெற்று இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

4) அவருடைய தம்பியும் சேர்ந்து வழக்கில் உள்ள எதிரிகளை தாக்கினார்கள் என்றும் அதற்காக எதிரிகள் கொடுத்த புகார் மனுவினை காவல் நிலையத்தில் வாங்க மறுத்து விட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் பொய்யாக இந்த வழக்கில் புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு